3. தகவல் கோரல்.

உறுப்புனர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் பணிவாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் காலரா இருக்கிறது என்று சொன்னால், அதைக் குறித்து மானியக் கோரிக்கை மீது 25 நாள் கழித்து வருகிற விவாதத்தில் பேசுங்கள் என்று கூறி நானும், தோழர் உத்திராபதி அவர்களும் கொடுத்துள்ள தீர் மானத்திற்குப் பதில் அனுப்பி இருக்கிறீர்கள். இது ஒரு சீரியஸ் ஸான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் பொறுத்த வரையில் அது சீரியஸ்ஸாகத் தோன்றலாம். இப்படிப்பட்ட நேரங்களில் அதைப் பற்றி எடுத்துக்கொள்ளவோ அல்லது அனுமதி அளிப்பதற்கோ இல்லை. அப்படி அனுமதி அளிப்பது மரபும் இல்லை, முறையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

ஹையர் செகண்டரி வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானது

மாண்புமிகு பேரவைத் தலைவர் திருவாளர்கள் மு. அப்பாத் துரை, எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி ஆகியோர் ''ஹையர் செகண்டரி 1981-க்கான வினாத்தாள்கள் பம்பாயிலிருந்து இரயில் மூலமாக வரும்போது வேகன் உடைக்கப்பட்டு வினாத் தாள்கள் திருடப்பட்டு இருப்பதாகவும் வெளியாகிவிட்டதாகவும் கூறப்படுவதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்பு கள் கொடுத்துள்ளனர். இது எப்படி பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாத்துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நடைபெற இருக்கின்ற ஹையர் செகண்டரி மாணவர்களுக்கான கேள்வித்தாள்கள் பம்பாயிலிருந்து இரயில் மூலம் வருகிறபோது வழியில் உடைக்கப்பட்டு, அந்த வினாத்தாள்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதன் காரணமாக மீண்டும் அந்தக் கேள்வித்தாள்கள் அச்சிடப்பட வேண்டும் என்று சொல்லி பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலை இருப்பதால் மாணவர்கள் மத்தியில் கேள்விகள் ஒழுங்காக இருக்குமா, அல்லது மாற்றப்பட்டு இருக்குமா என்கிற ஐயம்

ஏற்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழக மாணவர்கள் மத்தியில் இருப்பதால் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது. இது தமிழகத்தில் உள்ள மாணவர்களின் ஒட்டு மொத்தமான நிலைமையை ஒட்டி இருக்கிற காரணத்தால் இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக அரசு நடத்தும் பொதுத் தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் பல மாதிரிகளில் முன்கூட்டியே தயாரிக்கப் பட்டு தயார் நிலையில் வைக்கப்படுகின்றன. இவ்விதம் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களில் ஒரு வினாத்தாள் தேர்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகிறது. தேர்வுக்கான வினாத்தாள்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் இரகசியமாக அச்சடிக்கப்படுகின்றன.

இவ்விதம் அச்சடிக்கப்பட்டு சென்னைக்கு வந்து சேர்ந்த ஒரு குறிப்பிட்ட வினாத்தாள்கள் அடங்கிய பெட்டி ஒன்று திறக்கப் பட்டிருந்தது தெரிய வந்தது. பெட்டியைத் திறந்து சோதித்ததில் பெட்டியில் கொண்டுவரப்பட்ட வினாத்தாள் கட்டுகள் சரியாக இருந்தன என்றும் அவைகள் எதுவும் திருடப்படவில்லை என்றும் தெரிய வந்தது. இவ்வினாத்தாள் கட்டுகள் திருடப்படாமல் இருந்தபோதிலும் மிகுந்த முன் எச்சரிக்கை உணர்வுடன் வேறு ஒரு வினாத்தாளை நடைபெற இருக்கும் தேர்வுக்கு உபயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேர்வு வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகி விட்டது என்ற நிலைமைக்கு இடமேதும் இல்லை. வினாத்தாள்கள் திருடப்பட்டதாகவும் வினாத்தாள்கள் வெளியாகிவிட்டதாகவும் கூறப்படுவது சரியல்ல.

தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நடப்பதற்கு முன்னர் வெளியாகாமல், தேர்வுகள் சீரிய முறையில் எப்போதும் நடைபெறுவதற்குள்ள நடவடிக்கைகள் யாவும் முன்னெச்சரிக்கையுடன் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவுமறுக்கப்பெறுகிறது.